குறுக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம் 5.15PM

அ.வ.எண் 24/2014 நாள் 27.09.2019 சிதம்பரம், த/பெ..கருப்பகோனார்

DW1

வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

ஆ பட்டி சொத்தில் 13ம் பிரதிவாதி பெரியதம்பிக்கு கீழ்புறம் எனக்கு சொந்தமான கூரை வீடு இருப்பதாக சொல்லியுள்ளது உண்மையல்ல என்றாலும் அவ்வாறு இருப்பதாக பொய் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. ஆ பட்டி 12 செண்டு சொத்து மீனி கோனார் வகையறாவுக்கு சொந்தம் என்றால் சரிதான். மீனி என்பது அந்த வகைறாவுக்கு உரிய பெயர் என்றால் சரிதான். வழக்குரையை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் இல்லை. என் வழக்கறிஞர் படித்துசொன்னாரா என்றால் சொன்னார். 19.07.1972ல் மீனி சின்னான் கோனார் என்கிற ரெங்க கோனார் மகன் ராசுக் கோனார் என்பவரிடம் பொட்டுக்கோனர் மகன் பெரியான் கோனார் மகன் தாவா ஆ பட்டி சொத்தை கிரயம் பெற்றுள்ளதாக சொல்லியுள்ளார் அந்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. 12 செண்டு வழக்கு சொத்தின் நான்கெல்லை தெரியுமா என்றால் கிழக்கே ரெங்கசாமி மற்றும் குப்புசாமி கோனார், தெற்கே பெரியதம்பி கோனார், ராம கோனார், சிதம்பர கோனார், மேற்கே ரெங்க கோனார், பொட்டு கோனார், வடக்கே ரோடு. 12 செண்டுக்கு மேற்கே அன்னபூரணி, பெரியான் கோனார் என்றால் சரிதான். தென்புறம் ராம கோனார் கிடையாது என்றாலும் சோகையன் கோனார் என்றால் சரியல்ல. அவரது மகன்தான் ராமக்கோனார். செருவா விடுதி கருப்ப கோனார் மகன் பெரியதம்பி மீனி கோனார் வகையறாவை சேர்ந்தவர் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 1முதல் 3 வரையிலான ஆவணங்கள் தாவா ஆ பட்டி சொத்தினை கிரயம் வாங்கிய ஆவணங்கள் என்று தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான், பி.வா.சா.ஆ.1 முதல் 3 ஆவணங்களில் மீனி கருப்ப கோனார் என்று எழுதப்படவில்லை என்றால் சரியல்ல வகையறா பெயர் போடவில்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் மீனி கோனார் வகையறாவை சேர்ந்தவர்கள் எழுதி கொடுத்தது என்று எழுதியுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணம் ஏண் தாக்கல் செய்துள்ளேன் என்றால் கோதைய கோனாரை வழக்கில் சேர்க்காததால் அந்த பத்திரத்தை போட்டுள்ளேன். அவர் 12 செண்டில் எத்தனை செண்டு வாங்கியுள்ளார் என்றால் 6 1/4 செண்டு அதாவது 12 செண்டில் ஆஜர் வடபுறம் வாங்கியுள்ளார். அந்த 6 1/4 செண்டுக்கு நான்கெல்லை தெரியுமா என்றால் ரோட்டிற்கு தெற்கு, ரெங்கசாமி கோனாருக்கு மேற்கு, பெரியான் கோனார் , பொட்டு கோனாருக்கு கீழ்புறம் , பெரியதம்பி கோனாருக்கு வடக்கு. அவர் பி.வா.சா.ஆ.1 ஏற்பட்ட தேதியில் அதில் கண்ட புல எண்ணில் எனக்கு உரிமை கிடையாது என்றால் சரியல்ல.கோதைய கோனார் வாங்கிய தேதியில் நானும் சிதம்பர கோனார், ரெங்கசாமி கோனார் மூவரும் சேர்ந்து வாங்கினோம் என்றால் சரிதான். 3 பத்திரமும் ஒரே தேதியில் ஏற்பட்டது என்றால் ஆமாம். பி. வா.சா.ஆ. 1 ஏற்பட்ட காலத்தில் எனக்கு சொத்து இல்லை என்பதால் தென்புற நான்கெல்லையில் க.சிதம்பரம் என்று சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 ல் 3 செண்டுக்கான பத்திரம் என்றால் சரிதான். அந்த 3 செண்டுக்கு வடக்கே யார் இடம் என்றால் கோதையன், கிழக்கே குப்புசாமி, ரெங்கசாமி, தெற்கே ராமக்கோனார், மேற்கே ரெங்க கோனார் பொட்டு கோனார். அந்த பத்திரத்தில் வடபுற எல்லையில் பொ. ரெங்கசாமி என்று காணப்பட்டுள்ளது வாதி வகையறா என்றால் சரிதான். சோ.மு.பெரியதம்பி கோனார் தென்புறம் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். தென்புற நான்கெல்லையில் கண்ட சோ.மு.பெரியதம்பி கோனாருக்கு வழக்கு ஆ பட்டி சொத்தில் பாத்தியமான சொத்து உள்ளது என்றால் சரிதான். எவ்வளவு உள்ளது என்றால் நினைவில்லை. நான் என் அண்ணன் ரெங்கசாமி கோனார், கோதையன் பி.வா.சா.ஆ.3 படி வாங்கிய சொத்து எங்கு உள்ளது என்றால் கோதையனுக்கு கீழ்புறம், ரெங்கசாமிக்கு மேல்புறம், ரோட்டுக்கு தென்புறம், சிதம்பரம் சொத்துக்கு வடக்கே. அந்த சொத்து கோதைய கோனார் வாங்கிய 6 1/4 செண்டில் உள்ளதா என்றால் இல்லை அது ரோடாக உள்ளது. பி.வா.சா.ஆ.3 படி வாங்கியதாக சொல்லும் சொத்து பிவா.சா.ஆ. 1 ஆவணத்திலுள்ள சொத்தில் அடங்கியுள்ளது என்றால் சரியல்ல. பி..வா.சா.ஆ.1 முதல் 3 ஆவணங்கள் எழுதிககொடுத்த

பெரியதம்பிக்கு அந்த சொத்தில் உரிமை கிடையாது என்றால் சரியல்ல. அந்த சொத்து வா.சா.ஆ.1 படி கிரயம் பெற்ற பெரிய கோனாருக்குதான் சொந்தம் என்றால் சரியல்ல. அந்த பெரிய கோனாருக்கு வாதி, 1 முதல் 4 பிரதிவாதிகள் வாரிசுகள் என்பதால் அவர்களுக்குத்தான் ஆ பட்டி சொத்து உரிமையுண்டு என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் இருப்பது அடியான் கோனார் தெரு என்றால் சரிதான். நான் அங்கு வசிக்கவில்லை என்றாலும் கொல்லன் தெருவில் வசிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.4 வீட்டு வரி ரசீது கொல்லன் தெருவில் உள்ள என் வீட்டிற்கான ரசீது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் மொத்தம் 36 செண்டும் எனக்கும் என் சகோதரர்களுக்கு மட்டும் சொந்தமா என்றால் ஆமாம் 24 செண்டு சொந்தம். மீதமுள்ள 12 செண்டு கோதையன், சூரியமூர்த்திக்கு சொந்தம். 23.05.1960ல் என் அம்மா மற்றும் சகோதரர்கள் என் மைனராக காட்டி 36 செண்டை அடமானம் வைத்துள்ளார் என்றால் சரியல்ல. எத்தனை செண்டு அடமானம் வைத்துள்ளார் என்றால் 12 செண்டுதான் வைத்தார்கள். ஆ பட்டி சொத்து எனக்கு சொந்தமில்லை என்றால் சரியல்ல. அ அட்டவணை சொத்து எனக்கும் வாதி வகையறாவிற்கும் பொதுவில் உள்ள சொத்து என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 முதல் 4 வரையிலான ஆவணங்கள் மோசடியாக ஏற்படுத்திய ஆவணங்கள் என்றாலும் அது வழக்கு சொத்தில் எந்த உரிமையும் ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்திலுள்ள சர்வே எண்ணில் எனக்கு 9 1/2 செண்டு பாத்தியமில்லை என்றால் சரியல்ல. எங்களுக்குள் பாகமாகிவிட்டதா என்றால் ஆகிவிட்டது. எந்த தேதியில் பாகம் ஆனது என்றால் நினைவில்லை. நாங்கள் தனித்தனியாக குடியிருந்து வந்தோம் என்றால் சரியல்ல. நான் சொல்வது போன்று அ பட்டி 1வது அயிட்ட சொத்தின் வடபுறம் 6 செண்டு வாதி வகையறாவிற்கு சொந்தம், தென்புறம் எங்களுக்கு சொந்தம் என்றாலும் நான் தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அ பட்டி சொத்தின் 2 வது அயிட்டசொத்து என் அப்பாவால் கிரயம் வாங்கப்பபட்டதால் வாதி வகையறாவிற்கு உரிமையில்லை என்று மோசடியாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஆ பட்டி சொத்தில் எங்களுக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.
இத்துடன் குறுக்கு விசாணை முடிக்கப்பட்டது.
குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 6.00PM

Sd/- சிதம்பரம்,

*Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him/her to be Correct.*

Sd/- G. Sathiakumar,

District Munsif, Pattukkottai,(FAC)